**செய்திக்குறிப்பு**

**வேளாண்மைத் துறையைப் புத்துருவாக்கம் செய்த பெண்களைக் கௌரவிக்கும் விதமாக மகளிர் கிருஷி சக்தி விருதுக்கான பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன**

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் (MSSRF), ஜே.எஸ்.டபிள்யூ (JSW) அறக்கட்டளையுடன் இணைந்து, வேளாண்மையில் பெண்களுக்கான மகளிர் கிருஷி சக்தி தேசிய விருது 2026-ஐ முதன்முறையாக அறிவித்துள்ளது.

இந்திய அளவில் பெண்கள் அல்லது பெண்கள் தலைமையில் இயங்கும் வேளாண்மை நிறுவனங்கள், உணவு அமைப்புகள், கிராமப்புற வாழ்வாதாரம் மற்றும் சூழலியல் பாதுகாப்பு ஆகிய துறைகளில் ஆற்றும் அரிய பங்களிப்புகளை அங்கீகரித்துக் கௌரவிக்கும் நோக்கில் இந்தத் தேசிய விருது உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய அளவில் அங்கீகாரம் பெறாமலேயே, வேளாண்மை, உயிரியல் பன்மை மற்றும் பழங்குடி மக்களின் பாரம்பரிய அறிவு, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன், ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய துறைகளில் களப்பணியில் ஈடுபட்டுள்ள பெண் தலைவர்கள் மற்றும் நிறுவனங்களைக் கௌரவிக்கவே இந்த விருது நோக்கம் கொண்டுள்ளது.

இந்த முயற்சியின் மூலம், இந்தியாவின் வேளாண் மற்றும் கிராமப்புற பொருளாதாரத்தைப் புத்துருவாக்கம் செய்துகொண்டிருக்கும் பெண்களின் தனிப்பட்ட முயற்சி, புதுமையான தொழில்நுட்ப முயற்சி, தலைமைத்துவம் மற்றும் வேளாண் சமூக மாற்றத்திற்கான அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் விதமாக JSW அறக்கட்டளையும் MSSRF-உம் இந்த முன்னெடுப்பை எடுத்துள்ளன.

சமூகத்தில் முன்னெடுக்கப்பட்ட அறிவுசார் பங்களிப்பை வேளாண்மைத் துறையில் பகிர்ந்துகொள்ளவும், எதிர்காலப் பெண் தலைவர்களை ஊக்குவிக்கும் ஒரு தளமாகவும் இந்த விருது வடிவமைக்கப்பட்டுள்ளது.

“இந்தியாவில் கிராமப்புறப் பெண்களில் பெரும்பான்மையினர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர், ஆயினும் அவர்களின் பங்களிப்புகள் பெரும்பாலும் போதுமான அளவில் அங்கீகாரம் பெறவில்லை. மகளிர் கிருஷி சக்தி விருது, அன்றாட வேளாண்மை மற்றும் கிராமப்புற வாழ்வாதாரத்தை வடிவமைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் தலைமைத்துவம், அறிவுசார் முன்னெடுப்பு மற்றும் தொழில்முனைவைப் புலப்படுத்த முயல்கிறது. இந்தத் தளம் சிறந்த பெண் தலைவர்களைக் கௌரவிப்பதோடு மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் உள்ள கிராமப்புறப் பெண்கள் மற்றும் இளம்பெண்களுக்கான நம்பிக்கையை உருவாக்கும் என நம்புகிறோம்,” என வேளாண்மை மற்றும் கிராமப்புற அமைப்புகளில் பெண்கள் பிரிவு, JSW தலைவர் – MSSRF, ரீமா சாத்தே தெரிவித்தார்.

இந்த விருது கீழ்க்கண்ட பிரிவுகளின் கீழ் வழங்கப்படும்:

1. விதைகள், உயிரியல் பன்மை மற்றும் பழங்குடி மக்களின் பாரம்பரிய அறிவு

2. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்
3. ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்

மேலும், மாற்றத்தை ஏற்படுத்தும் தலைமைத்துவம் மற்றும் பெண்களை மையமாகக் கொண்ட புதுமை மற்றும் தொழில்நுட்ப வடிவமைப்பிற்காக, பூமி ஜா ராஷ்ட்ரிய சம்மான் (நிலம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான தேசிய சிறப்பு விருது) சிறப்புச் சான்றிதழாக வழங்கப்படும்.

இந்த விருதுகளை, முனைவர் R. A. மஷேல்கர் (சிறப்பு வழிகாட்டி மற்றும் பத்ம விபூஷன், பத்ம பூஷண், பத்ம ஸ்ரீ விருதுபெற்றவர்); முனைவர் ரேணு ஸ்வரூப் (நடுவர் குழுத் தலைவர் மற்றும் இந்திய அரசு உயிரித் தொழில்நுட்பத் துறையின் முன்னாள் செயலாளர்); திரு. டி. நந்தகுமார், IAS (ஓய்வு) (நடுவர் குழு உறுப்பினர் மற்றும் இந்திய அரசின் முன்னாள் வேளாண்மைச் செயலாளர் மற்றும் NDDB முன்னாள் தலைவர்); பேராசிரியர் நித்யா ராவ் (பாலினம், கிராமப்புற வாழ்வாதாரம், உணவு அமைப்புகள் மற்றும் பெண்களின் பணி குறித்த சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வாளர்); பேராசிரியர் சஞ்சய் சோட்பே (PHFI தலைவர் மற்றும் பொது சுகாதாரத் துறைத் தலைவர்); திரு. R. பவித்ரா குமார் (CEO, ஜே.எஸ்.டபிள்யூ அறக்கட்டளை); மற்றும் திருமதி மேஃபெரீன் ரிண்டாதியாங் (நிறுவனர், Grassroot Shillong மற்றும் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்) ஆகியோர் அடங்கிய நடுவர் குழு தேர்ந்தெடுக்கும்.

விருது பெறுபவர்களுக்கு சான்றிதழ், கோப்பை மற்றும் ₹3 லட்சம் முதல் ₹7 லட்சம் வரையிலான பரிசுத் தொகையை JSW அறக்கட்டளையும் MSSRF-உம் இணைந்து வழங்கும். மேலும், தேசிய அளவிலான அங்கீகாரம், தொழில்முறை தொடர்பு மற்றும் இந்தியா முழுவதும் கிராமப்புறப் பணியாற்றும் பெண் தலைவர்களின் வளர்ந்துவரும் சமூகத்துடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்புகளும் வழங்கப்படும்.

**பரிந்துரைகளுக்கான தகுதிகள்:**

- 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட இந்தியப் பெண்கள், வேளாண்மைத் துணைத் துறைகள் அல்லது கிராமப்புற வாழ்வாதாரத்தில் தொடர்ச்சியான பங்களிப்பைச் செய்து வருபவர்கள்.
- பெண்கள் தலைமையிலான நிறுவனங்கள்.

விருதுக்கான பரிந்துரைகளைச் சுய-பரிந்துரையாகவோ அல்லது ஆதரவளிக்கும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் மூலமோ சமர்ப்பிக்கலாம். பரிந்துரை சமர்ப்பிக்கும் காலம் 14 ஆகஸ்ட் 2026 அன்று தொடங்கியது, மேலும் விண்ணப்பங்கள் 15 செப்டம்பர் 2026 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை MSSRF-யின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் உள்ள விருது போர்ட்டல் மூலம் சமர்ப்பிக்கலாம்: https://mssrf.org/mahila-krishi-shakti-puraskar

**விருது தொடர்பான சந்தேகங்களுக்கு:**

மின்னஞ்சல்: mahila.krishishakti@mssrf.res.in

தொலைபேசி: 044-22541229

**MSSRF ஊடகத் தொடர்புகள்:**

ஜோதி ஷெலார், தொடர்பு மற்றும் நன்கொடையாளர் தொடர்புப் பிரிவுத் தலைவர்: 9920394959

ஷ்ரேயா நாயுடு, அறிவியல் தொடர்பு மேலாளர்: 9791196037